# GODDependence செய்தி மடல்

True freedom is being dependent on God

ஜூலை 2025



## ஒரு தாயிலும் மேலானவர்

**ஸ்திரீயானவள் தன் கர்ப்பத்தின் பிள்ளைக்கு இரங்காமல், தன் பாலகனை மறப்பாளோ? அவர்கள் மறந்தாலும், நான் உன்னை மறப்பதில்லை. இதோ, என் உள்ளங்கைகளில் உன்னை வரைந்திருக்கிறேன்; உன் மதில்கள் எப்போதும் என் முன் இருக்கிறது.**
**(ஏசாயா 49: 15-16)**



ஒரு தாயின் அன்புதான் சுயநலமற்ற, கரிசனை மிகுந்த, தியாகமான மற்றும் நிபந்தனையற்ற மனித அன்பின் மிகச் சிறந்த வடிவம் என்பதை அனைவரும், ஏன் கடவுளை நம்பாதவர்களும் கூட ஒப்புக்கொள்வர். தன் குழந்தைமீது அன்பு காண்பிக்காத ஒரு தாயை காண்பது மிகவும் அரிது.

ஏசாயா 49:16இல், தேவன் தம் ஜனங்கள் மீது கொண்டிருக்கும் அன்பை விளக்குவதற்காக அனைவருக்கும் பதில் தெரிந்த ஒரு கேள்வியைக் கேட்கிறார். உன்னை நேசிக்கும் தாய் மறந்தாலும் கூட, "நான் உன்னை மறப்பதில்லை" என்று தேவன் கூறுகிறார். சில சமயங்களில், குறிப்பாக நாம் கடினமான காலங்களினூடாகச் செல்கையில், ஒருவரும் நம்மை நேசிக்கவில்லை என்று நாம் நினைக்கக்கூடும்.

இங்கே கடவுள் நான் உன்னை நேசிப்பதுடன், உன்னை மறக்கமாட்டேன் என்றும் சொல்கிறார். எரேமியா 31:20இல், "எப்பிராயீம் எனக்கு அருமையான குமாரன் அல்லவோ? அவன் எனக்குப் பிரியமான பிள்ளையல்லவோ? அவனுக்கு விரோதமாய்ப்பேசினது முதல் அவனை நினைத்துக்கொண்டே இருக்கிறேன்; ஆகையால் என் உள்ளம் அவனுக்காகக் கொதிக்கிறது; அவனுக்கு உருக்கமாய் இரங்குவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்." "என் தகப்பனும் என் தாயும் என்னைக் கைவிட்டாலும், கர்த்தர் என்னைச் சேர்த்துக்கொள்ளுவார்" என்று சங்கீதக்காரனைப்போல நாம் உறுதியாக இருக்க முடியும் (சங்.27:10).

பொதுவாக, எதிர்காலத்தையும் வெற்றிகளையும் முறையாக அணுகுவதற்கு தங்கள் வாழ்க்கையைக் குறித்த ஒரு தெளிவான வரைபடத்தை உடையவர்களாக இருக்க வேண்டும் என ஜனங்கள் விரும்புகின்றனர். "நீங்கள் திட்டமிடத் தவறினால், தோல்வியடைவதற்காக நீங்கள் திட்டமிடுகிறீர்கள்" என அவர்கள் சொல்கிறார்கள். தோல்விகளையும், ஏமாற்றங்களையும் எதிர்கொள்ளும் போது, நாம் கர்த்தரைப் பார்த்து, "ஏன் என்னை மறந்தீர்?" என்று கேட்கக்கூடும் (சங்.42:9). ஆனால் தேவனோ நம்மை அவர் தம் உள்ளங்கைகளில் வரைந்திருப்பதாகச் சொல்கிறார். வசனத்தைக் கவனமாகப் பாருங்கள். அடிக்கடி மறந்து போகிற இயல்புடையவர்கள் பெயர்களை அல்லது குறிப்பிட்ட காரியங்களை தாங்கள் நினைவுகூரும்படி எழுதி வைத்துக் கொள்வார்கள். ஆனால் தேவனோ நம்மை உள்ளங்கைகளில் வரைந்திருக்கிறார்.

நம் எதிர்காலத்தைக் குறித்த திட்டத்தை நாம் தேவனிடம் கேட்டால், அவர் நம்மிடம் கவலைப்படாதே என்று சொல்லி, தம் அன்பினைப்பற்றி உறுதிப்படுத்த ஆணிகள் கடாவிய கரங்களைக் காண்பிப்பார். நம் எதிர்காலத்தைக் குறித்து தேவன் ஒரு திட்டம் வைத்திருக்கிறார்; அது நம்முடைய திட்டங்களைக் காட்டிலும் சிறந்தது ஆகும் (எரே.29:11). கடைசியாக, நம் வாழ்க்கை மீதான அவருடைய ஆளுகை மற்றும் பாதுகாப்பைப்பற்றி தேவன் நமக்கு நினைவூட்டுகிறார். பண்டைய காலத்தின் மதில் சுவர்கள் நகரத்திற்குள் வாழ்ந்தவர்களைப் பாதுகாத்ததைக் காட்டிலும் அதிகமாக தேவன் நம்மைப் பாதுகாக்கிறார், பராமரிக்கிறார், தேவைகளைச் சந்திக்கிறார். தேவன் பரலோகத்தில் இருந்து நம்மைப் பார்க்கிறார்; அவரிடத்தில் இருந்து நமக்கு ஒத்தாசை வருகிறது.

நம் வாழ்க்கையைப்பற்றின தேவனுடைய தனித்துவமான, ஆச்சரியமான, ஆறுதலளிக்கும் வாக்குத்தத்தங்கள் நம்மிடம் உண்டு. எதையாவது குறித்து நாம் ஏன் கவலைப்படவேண்டும்? ஒரு தாயிலும் மேலாக, தேவன் நம்மை நேசிக்கிறார். அவர் கிருபை நமக்குப் போதுமானதாக இருக்கிறது. இதைவிட நமக்கு வேறென்ன வேண்டும்!

**- சகோ. அற்புதராஜ் சாமுவேல், பெங்களூர்.**

**தேவனுடைய வார்த்தை சத்தியம் ஆகும். நீங்கள் பரிசுத்தமானவர்கள் என்றும் உங்கள் பரலோக தந்தைக்கு மிகவும் பிரியமானவர்கள் என்றும் அவருடைய சத்திய வார்த்தை சொல்கிறது. - லிசா டெர்கர்ஸ்ட்**

**கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான சகோதர சகோதரிகளே,**

நமது ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்கள் அனைவருக்கும் GODependence குழுவின் சார்பில் எனது அன்பின் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். இந்த செய்திமடல் மூலம் மீண்டும் உங்களுடன் தொடர்பு கொள்ள தேவன் கொடுத்த இந்த வாய்ப்பிற்காக அவருக்கு நன்றி செலுத்துகிறேன்.

2025 ஆம் வருடத்தின் ஆறு மாதங்களை கடந்து விட்டோம். புத்தாண்டில் எடுத்த நமது தீர்மானங்களின் ஒரு பகுதியாக வேத வாசிப்பு பழக்க வழக்கம் எந்த அளவிற்கு இன்னமும் தொடர்ந்து கொண்டிருக்கிறது? ஆரம்பத்தில் இருந்த அதே உத்வேகத்துடன் நம்மால் தொடர முடிகிறதா?

வேகமாக நகரும் நவீன வாழ்க்கைச் சூழலில், நமது வேதாகம வாசிப்பு பின்னணியில் நகர்ந்துவிட அனுமதிப்பது எளிதாக நடக்கும் ஒன்று தான். ஆனால், கிறிஸ்துவில் வளர, நிலைத்து நிற்க மற்றும் நோக்கமுள்ள வாழ்க்கை வாழ விரும்பும் ஒரு கிறிஸ்தவருக்கு, தேவனுடைய வார்த்தையுடன் தொடர்ந்து ஈடுபடுவது என்பது அவசியமான ஒன்று. வேதாகமத்தில் தினசரி நேரத்தை செலவிடுவதன் மூலமே நாம் தேவனுடைய குரலைக் கேட்கிறோம், நமது இருதயங்களை மறுசீரமைக்கிறோம், மற்றும் வாழ்க்கைக்கான நோக்கத்தை காண்கிறோம். இந்த தொடர்ச்சியான செயல் எப்போதும் உற்சாகமானதாக தோன்றாமல் இருக்கலாம், ஆனால் அது ஆழ்ந்த வலிமை வாய்ந்தது, மற்றும் மாற்றத்தை ஏற்படுத்தக்கூடியது.

**வேதாகமத்தை தொடர்ந்து வாசிப்பது ஒரு ஒழுங்கு மட்டுமல்ல; அது ஒரு உயிர்நாடி.** "மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான்" (மத்தேயு 4:4) என்ற வசனத்தின்படி, வேதாகமத்துடன் நமது தினசரி ஈடுபாடு நம் ஆத்துமாவை போஷித்து தேவனுடைய சத்தியத்தில் நம்மை நிலைநிறுத்துகிறது. "கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் ... ... நீர்க்கால்களின் ஓரமாய் நடப்பட்டு, தன் காலத்தில் தன் கனியைத் தந்து, இலையுதிராதிருக்கிற மரத்தைப் போலிருப்பான்" (சங்கீதம் 1:2–3) என்று சங்கீதக்காரர் நமக்கு நினைவூட்டுகிறார். இந்த வேரூன்றுதல் எப்போதாவது வாசிக்கும் வாசிப்பிலிருந்து வருவதில்லை, மாறாக தேவவார்த்தையுடன் உள்ள தொடர்ச்சியான, நிலையான உறவிலிருந்தே வருகிறது.

**வேதாகமத்தை தொடர்ந்து வாசிப்பதற்கு கவனம் தேவை.** வேதாகம வாசிப்பில் தொடர்ந்து இருக்க, குறிப்பாக கவனத்தை சிதறடிக்கும் விஷயங்கள் நிறைந்திருக்கும் போது, நாம் கவனம் மற்றும் உறுதியான மனதினைக் கொண்டிருக்கவேண்டும். உன் கண்கள் நேராய் நோக்கக்கடவது; உன் கண்ணிமைகள் உனக்கு முன்னே செவ்வையாய்ப் பார்க்கக்கடவது. உன் கால் நடையைச் சீர்தூக்கிப்பார்; உன் வழிகளெல்லாம் நிலைவரப்பட்டிருப்பதாக." என நீதிமொழிகள் 4:25–26 நமக்கு நினைவூட்டுகிறது. பிலிப்பியர் 3:14-ல் அப்போஸ்தலனாகிய பவுலும் இந்த கவனத்தை பிரதிபலிக்கிறார், "கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப்பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறேன்." நாம் நமது இருதயத்தை நேரான பாதையில் நிலைத்திருக்கும்படி தீர்மானிக்கும்போது, சிறிய தினசரி தருணங்களில் கூட, தேவன் அந்த தொடர் மற்றும் விடாமுயற்சியை மதித்து, காலப்போக்கில் நமது பண்புகளை வடிவமைக்கிறார்.

**வேதாகமத்தை தொடர்ந்து வாசிப்பதற்கு விடாமுயற்சி தேவை.** தினசரி நமது வேதாகமத்தைத் திறப்பது என்பது ஒரு சிறிய செயலாகத் தோன்றலாம், ஆனால் காலப்போக்கில் அது நமது இருதயத்தை வடிவமைக்கிறது, நமது மனதைப் புதுப்பிக்கிறது, மற்றும் நமது ஆவியைப் பயிற்றுவிக்கிறது. "நன்மைசெய்கிறதில் சோர்ந்துபோகாமல் இருப்போமாக; நாம் தளர்ந்துபோகாதிருந்தால் ஏற்றகாலத்தில் அறுப்போம்." (கலாத்தியர் 6:9). எதிர்மறையான சூழ்நிலைகளிலும் தனது வழக்கமான ஜெபம்செய்யும் பழக்கம் கொண்டிருந்த தானியேல் மிகவும் சக்திவாய்ந்த ஒரு உதாரணம். – "அங்கே தான் முன் செய்துவந்தபடியே, தினம் மூன்று வேளையும் தன் தேவனுக்கு முன்பாக முழங்காற்படியிட்டு ஜெபம்பண்ணி, ஸ்தோத்திரம் செலுத்தினான்." (தானியேல் 6:10). இத்தகைய விசுவாசமான பழக்கங்கள் ஆவிக்குரிய உறுதியை கட்டி எழுப்புகின்றன.

வேதவாசிப்பில் தொடர்ச்சியாக இருப்பது ஒரு தினசரி வழக்கம் என்பதல்ல, அது தேவனுடனான உறவு. எனவே, தேவனுடைய வார்த்தையுடன் நமது தினசரி தொடர்பு மூலம், அவரைப் பற்றிய அறிவை ஆழப்படுத்துவோம், நமது நம்பிக்கையை வலுப்படுத்துவோம், மற்றும் வாழ்க்கையின் ஒவ்வொரு பருவத்திலும் விசுவாசமாக நடக்க நம்மை பக்குவப்படுத்துவோம்.

நமது GODependence குழுவின் 3வது குடும்பக் கூடுகை 01 & 02 ஆகஸ்ட் 2025 ஆகிய நாட்களில் பெங்களூருவில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. குழுவின் உறுப்பினர்கள் தங்கள் குடும்பத்தினருடன் ஐக்கியம், ஆவிக்குரிய புத்தாக்கம் மற்றும் திட்டமிடலுக்காக பல்வேறு மாநிலங்களிலிருந்து ஒன்றுகூடுகிறோம். உங்கள் ஜெபங்களில் எங்களை நினைவுகூருங்கள்.

இந்த GODependence செய்திமடல் குறித்த உங்கள் கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளை பக்கம் 4 ல் கொடுக்கப்பட்டுள்ள கணக்கெடுப்பு இணைப்பின் மூலம் எங்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள். GODependence ஊழியங்களுக்காக தொடர்ந்து ஜெபியுங்கள். இதன் சேவைகளை மற்றவர்களுக்கும் அறிமுகப்படுத்துங்கள். கர்த்தருடைய நாமம் மகிமைப்படுவதாக.



**கிறிஸ்துவின் பணியில்,**

**Dr. பேதுரு தேவதாசன்.**

**நான் எந்த அளவுக்கு வேதாகமத்தை அதிகமாக வாசித்து, இயேசுவின் வாழ்க்கையைப் பற்றி ஆராய்ந்தறிகிறேனோ, அவ்வளவு அதிகமாக, கிறிஸ்தவம் பலவந்தமாகப் பரவாமல், மக்களைக் கவர்ந்திழுப்பதன் மூலமாகப் பரவுகிறது என்கிற உறுதியைப் பெறுகிறேன்.**
**- ஷேன் கிளைபொர்ன்**

# எண்ணிப்பார் நீ பெற்ற பாக்கியங்கள்!

சகோ. R. ஸ்டான்லி (BYM)



| | | |
|---|---|---|
| 1 | கிறிஸ்து உயிர்த்தெழுந்திராவிட்டால், | நாம் இன்னும் நமது பாவங்களிலேயே இருந்திருப்போம்! (1 கொரி 15:17) |
| 2 | தேவன் நம்மைத் தெரிந்தெடுத்துத் தம்மிடம் இழுத்திராவிட்டால், | நாம் ஒருபோதும் அவரது பிள்ளைகளாகியிருக்கமாட்டோம்! (யோ 6:44; 15:16; ரோ 8:28&30) |
| 3 | யாரோ ஒருவர் நமக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கித்திராவிட்டால், | நாம் ஒருபோதும் கிறிஸ்துவை விசுவாசித்திருக்கமாட்டோம்! (ரோ 10:13,14; அப் 8:30,31) |
| 4 | கர்த்தர் நம்மோடு பொறுமையாய் இருந்திராவிட்டால், | நாம் ஒருபோதும் மன்னிக்கப்பட்டிருக்கமாட்டோம்! (மத் 18:26,27; ரோ 2:4) |
| 5 | தேவன் கிருபை இரக்கம் உள்ளவராய் இருந்திராவிட்டால், | நாம் நிர்மூலமாகியிருப்போம்! (புல 3:22&24) |
| 6 | கிறிஸ்து பரலோகத்திற்கு ஏறியிராவிட்டால், | நாம் ஒருபோதும் பரிசுத்த ஆவியைப் பெற்றிருக்கமாட்டோம்! (யோ 16:7) |
| 7 | தேவ வசனம் நமது மகிழ்ச்சியாயிராவிட்டால், | நாம் நமது துக்கத்தில் அமிழ்ந்துபோயிருப்போம்! (சங் 119:92) |
| 8 | தேவன் சபைச் சரித்திரத்தில் ஒரு கூட்டத்தை மீதியாக வைத்திராவிட்டால், | நாம் சோதாம் கொமோராவைப் போலாகியிருப்போம்! (ஏசா 1:9) |
| 9 | கர்த்தர் நமது பக்கத்தில் இருந்திராவிட்டால், | நாம் நமது எதிரிகளால் விழுங்கப்பட்டிருப்போம்! (சங் 124:1&5) |
| 10 | தேவன் நம்மைச் சுற்றி வேலியடைத்து ஒரு வரம்பை வைத்திராவிட்டால், | நாம் பிசாசினால் அழிக்கப்பட்டிருப்போம்! (யோபு 1:10; 38:11; 1 கொரி 10:13) |
| 11 | பரிசுத்த ஆவியானவர் நம்மைச் சபையில் நாட்டியிராவிட்டால், | நாம் விசுவாசத்திலும் அன்பிலும் வளர்ந்துகொண்டிருக்கமாட்டோம்! (சங் 92:13,14; எபே 3:17&19; எபி 3:12,13; 10:24,25) |
| 12 | கிறிஸ்து நமக்கு ஊழியத் தலைவர்களைத் தந்திராவிட்டால், | நாம் திசைமாறிச் சென்றிருப்போம்! (எபே 4:11&13; அப் 20:28) |

தேவனுடைய வார்த்தையானது ஒரு சிங்கத்தைப் போன்றது. ஒரு சிங்கத்தை நீங்கள் பாதுகாக்கத் தேவையில்லை. நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் என்னவெனில், சிங்கத்தைக் கட்டவிழ்த்து விடுவதுதான். அப்பொழுது அந்த சிங்கம் தன்னைத்தானே பாதுகாத்துக் கொள்ளும். - சார்லஸ் ஸ்பர்ஜன்

தேவனது ஆசீர்வாதங்களையும், அவர் நமக்காகச் செயல்பட்டிராவிட்டால் நாம் எவற்றையெல்லாம் இழந்திருப்போமென்பதையும் முழுவதும் வரிசைப்படுத்த வாழ்நாளெல்லாம் ஆராய்ந்து பார்த்தாலும் முடியாது. ஆனாலும் **“அவர் செய்த சகல உபகாரங்களையும் மறவாதபடி”** இப்பயிற்சியை மேற்கொள்ளுங்கள்.

*எண்ணிப்பார் நீ பெற்ற பாக்கியங்கள்;*

*கர்த்தர் செய்த நன்மைகள் யாவும்;*

*ஆசீர்வாதம் எண்ணு ஒவ்வொன்றாய்;*

*கர்த்தர் செய்த யாவும் வியப்பைத் தரும்!*

– இப்பல்லவியைக் கொண்ட பாடலைப் பாடிப் பரமனைக் கொண்டாடுங்கள், பரவசம் கொள்ளுங்கள் !

Source: ஐந்தப்பம் இரு மீன்

## துதி மற்றும் ஜெபக் குறிப்புகள் - ஜூலை 2025

**துதிப்போம்:**

1. 2025 ஜூன் மாத இறுதியில் வேதவாசிப்பை வெற்றிகரமாக நிறைவு செய்த ஒவ்வொருவருக்காக.
2. 2025 ஜூன் மாதம் துவங்கப்பட்ட சிறுவர் வேதவாசிப்பு சவால் குழுக்களில் (தமிழ் மற்றும் ஆங்கிலம்) இணைந்து வேதாகமத்தை வாசித்து வரும் 179 பள்ளி மாணவ மாணவியர்களுக்காக.
3. 2025 ஜூன் மாதம் நடைபெற்ற படிப்பில் சிறந்து விளங்குவது எப்படி? என்ற GODependence Talk Show (தமிழ் மற்றும் ஆங்கிலம்) சிறப்பாக மற்றும் பயனுள்ளதாக அமைந்ததற்காக. அதில் கலந்துகொண்டு பயன்பெற்றவர்களுக்காக.
4. 2025 ஜூன் மாதத்திற்கு என்று திட்டமிட்ட காரியங்களை செய்து முடிக்க ஆண்டவர் உதவியதற்காக.
5. குடும்பம் / வேலை / படிப்பு / உடல்நலம் / ஊழியம் மற்றும் அனைத்திலும் கடந்து வந்த 6 மாதங்களில் ஆண்டவரின் தயவு இருந்ததற்காக.

**ஜெபிப்போம்:**

1. 2025 ஜூலை மாத வேதவாசிப்பு குழுக்களில் தங்களை இணைத்துக் கொண்டிருக்கிற ஒவ்வொருவரும் அந்த வேதவாசிப்பை இடையில் விடாமல் தொடரவும் மற்றும் வெற்றிகரமாக நிறைவு செய்ய.
2. சிறுவர் வேதவாசிப்பு குழுக்களில் இணைந்திருக்கிற அனைத்து பிள்ளைகளும் வேதவாசிப்பை வெற்றிகரமாக நிறைவு செய்ய. வேத வசனங்களை மனனம் செய்யும்போதும் தேவன் அவர்களோடு இடைப்பட.
3. வேதவாசிப்பு குழுக்களில் இணைந்து வேதாகமத்தை உற்சாகத்துடன் வாசித்து வரும் முதியவர்களுக்காக. அவர்களுக்கு ஆண்டவர் சுகம் / பெலன் / ஜீவன் தரவும் மற்றும் குடும்பத்தில் அவர்கள் ஆசீர்வாத ஊற்றாக விளங்கவும்.
4. கடந்த நாட்களில் அறுவை சிகிச்சைகள் முடிந்து பூரண சுகத்திற்காக காத்திருக்கும் ஒவ்வொருவரும் தெய்வீக சுகத்தை பெற்றுக்கொள்ள. தொடர்ந்து அவர்கள் தேவனுக்கு சாட்சியாக வாழ.
5. நிலுவையில் இருக்கின்ற ஒரு சில காரியங்களை விரைந்து செயல்படுத்திமுடிக்க ஆண்டவர் GODependence ஊழியர்களுக்கு வேண்டிய ஞானத்தை / பெலனை / ஒத்தாசைகளை தர.

## GODependence செய்திமடல் பற்றிய கருத்துக் கணிப்பு

**அன்புள்ள வாசகரே,**

நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற நாமத்தில் உங்களுக்கு எம் அன்பின் வாழ்த்துதல்கள்!

கடந்த 9 மாதங்களாக (இந்த மாதம் உட்பட), GODependence செய்திமடல் முறையான பைபிள் வாசிப்பை ஊக்குவிப்பதற்கும், துதிக் குறிப்புகளைப் பகிர்ந்து கொள்வதற்கும், ஜெபம் மற்றும் சாட்சிகள் மூலம் நமது ஐக்கியத்தை பலப்படுத்துவதற்கும் ஒரு தாழ்மையான முயற்சியாக இருந்து வருகிறது.

முன்னோக்கிப் பார்க்கும்போது, நாங்கள் இந்த செய்திமடலை மேம்படுத்த விரும்புகிறோம் - **உங்கள் கருத்து எங்களுக்கு மிகவும் முக்கியமானது**. இந்த சிறிய கருத்துக்கணிப்பு உங்கள் நேரத்தின் ஒரு சில நிமிடங்களை மட்டுமே எடுத்துக்கொள்ளும், ஆனால் வரும் நாட்களில் உங்களுக்கும் மற்றவர்களுக்கும் சிறப்பாக சேவை செய்ய இது எங்களுக்கு உதவும்.

நீங்கள் ஒரு வழக்கமான வாசகராக இருந்தாலும் அல்லது இப்போதுதான் வாசிக்கத் தொடங்கினாலும், உங்கள் நேர்மையான எண்ணங்கள், பரிந்துரைகள் மற்றும் ஊக்கம் எங்களை முன்னோக்கி வழிநடத்தும்.

நீங்கள் உங்கள் அடையாளத்தைக் குறிப்பிடாமலேயே கூட, இங்கே கொடுக்கப்பட்ட இணைப்பில் பதிலளிக்கலாம்: https://forms.gle/nkzaJvD7rBrYahKW9

இந்த பயணத்தின் ஒரு பகுதியாக நீங்கள் இருப்பதற்கு நன்றி. தொடர்ந்து நாம் தேவனைச் சார்ந்து நிற்போம்!

கிறிஸ்துவின் அன்பில்,

CLICK HERE https://forms.gle/nkzaJvD7rBrYahKW9

**ஆசிரியர் குழு**
GODependence செய்திமடல்.

**வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்; அவைகளால் உங்களுக்கு நித்தியஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே, என்னைக் குறித்துச் சாட்சி கொடுக்கிறவைகளும் அவைகளே. - யோவான் 5:39**

## 📕வேதவாசிப்பு சவால்கள் - 01 ஆகஸ்ட் 2025 முதல்📕

"இன்றைக்கே உங்கள் வேதாகமத்தை எடுத்து வாசிக்க ஆரம்பியுங்கள். அதை எடுத்து வாசிப்பதே உண்மையில் பரிசுத்த வேதாகமத்தை வாசிக்க வேண்டிய முறை ஆகும்." - ஜே.சி. ரைல். உங்களுக்கு வசதியான நேரத்திலும் வேகத்திலும் முழு வேதாகமத்தையும் வாசித்து முடிக்க நாங்கள், GODependence உங்களுக்கு உதவுகிறோம்.




**நமது வேதவாசிப்பு சவால் பங்கேற்பாளர்கள் சிலரது அனுபவ சாட்சிகள் பின்வருமாறு:**

👨‍🦳♂️ "GODependence வேத வாசிப்பு சவால் மிகச்சிறந்த அனுபவமாகவும், தினமும் தவறாமல் இரவுக்குள் கண்டிப்பாக வாசித்து முடிக்க வேண்டும் என்ற உத்வேகத்தையும் கொடுத்தது. முழு வேதாகமத்தையும் வாசிக்கக் கற்று கொடுத்த குழுவினருக்கும் நன்றி. தேவனுக்கு ஸ்தோத்திரம்." - Winfred Francis E

👨‍🦳♀️ "இது மிகவும் அருமையான ஒரு திட்டம். ஒவ்வொரு விசுவாசியும் வேதத்தை ஒழுங்கும் கிரமமும் ஆக ஆர்வத்தோடு தேடி வாசிக்க திட்டமிடப்பட்டிருக்கிறது. மிக உதவியாக இருக்கிறது. ஆர்வத்துடனும் எதிர்பார்ப்புடனும் வேதத்தை வாசிக்க உந்து கோலாகவும் இருக்கிறது." - Beaulah Enoch

👨‍🦳♂️ "முழு வேதாகம பகுதிகளையும் வாசிக்க நீங்கள் எனக்கு வாய்ப்பளித்ததில் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். இல்லையெனில், என்னால் இதை செய்திருக்க முடியாது. கர்த்தருக்கு ஸ்தோத்திரம்." - Dr. A. MariaSagayam

உங்கள் வேதவாசிப்பு முயற்சிகளில் உங்களுக்கு ஏதாவது உதவி தேவைப்படுகிறதா? ஆம் எனில், 01 ஆகஸ்ட் 2025 முதல் தொடங்கும் "வேத வாசிப்பு சவால்களுக்கு" GODependence உங்களை அன்புடன் அழைக்கிறது.

**.இதன் சிறப்பு அம்சங்கள்:**

✷ வேதவாசிப்பு சவாலின் காலம் 1 மாதம் முதல் 1 வருடம் வரை நீங்களே தெரிவு செய்யும் வாய்ப்பு. [முழு வேதாகமத்தையும் 1 மாதம் / 2 மாதங்கள் / 3 மாதங்கள் / 4 மாதங்கள் / 6 மாதங்கள் அல்லது 1 வருடத்தில் வாசித்தல்.]

✷ 10 மொழிகளில், உங்களுக்கு வசதியான ஒரு மொழியில் உள்ள குழுவில் இணைந்து கொள்ளலாம். [தமிழ், ஆங்கிலம், ஹிந்தி, மலையாளம், கன்னடம், தெலுங்கு, ஒடியா, பஞ்சாபி, மராத்தி அல்லது பெங்காலி]

✷ முந்தின தினம் இரவிலேயே கொடுக்கப்படும் வேதவாசிப்புப் பகுதி.

✷ வேதவாசிப்பை உற்சாகப்படுத்தும் மேற்கோள்கள் அல்லது காணொளிகள்.

✷ வேதவாசிப்பின் முன்னேற்றத்தை உறுதிப்படுத்த வாராந்திர, இருவார மற்றும் மாதாந்திர மீள்பார்வைகள்.

✷ வாசிப்பில் நீங்கள் பின்தங்க நேர்ந்தால், விடுபட்ட பகுதிகளை வாசிக்க வாய்ப்பு! எமது வாசிப்புத் திட்டத்தில் Catch - Up நாட்கள் மற்றும் திட்டங்களை மாற்றிக் கொள்ளுதல் ஆகியவை உண்டு. ஏனென்றால் வாழ்க்கையின் சிரமங்களை நாங்கள் புரிந்துகொள்கிறோம்!

✷ அனைவர் நலன் காக்கும் வாட்ஸ்அப் குழுக்களின் விதிமுறைகள்.

✷ பாராட்டுச் சான்றிதழ்கள் மற்றும் பரிசுகள் (*நிபந்தனைகளுக்குட்பட்டது)

👉 எனவே, முழு வேதாகமத்தையும் வாசித்து முடிக்க நீங்கள் ஆர்வமாக இருந்தால், உங்கள் வசதிக்காக நாங்கள் வடிவமைத்துள்ள வேதவாசிப்பு சவால்களில் ஒன்றில் சேர்ந்துகொள்ளுங்கள். உங்களுக்கு வசதியான ஒரு காலஅளவுத் திட்டம் மற்றும் மொழி_யைத் தேர்ந்தெடுத்து, அத்துடன் உங்கள் _பெயர் (வேதவாசிப்புச் சவாலை வெற்றிகரமாக முடிக்கும் போது அதற்கான பாராட்டுச் சான்றிதழில் அச்சிடப்பட வேண்டிய விதத்தில்) மற்றும் வயதை இந்த இணைப்பில் https://wa.me/96565962559 கிளிக் செய்து, +965 6596 2559 என்ற WhatsApp எண்ணிற்கு தெரிவிக்கவும்.

நன்றி. தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. ஆமென். 🙏

CLICK HERE **https://wa.me/96565962559**

- **GODependence குழு**

**** ☝️ இந்த செய்தியை உங்கள் குடும்ப உறுப்பினர்கள், உறவினர்கள், கிறிஸ்தவ நண்பர்கள் மற்றும் உங்கள் சபை உறுப்பினர்கள் அனைவருடனும் பகிர்ந்து கொள்ளுங்கள்... இதனால் அவர்களும் வழக்கமாக வேதாகமத்தை வாசிக்கும் பழக்கத்திற்குள் வரலாமே!

**பரிசுத்த வேதாகமமானது புற்றுநோய்களுக்கெல்லாம் கொடிய புற்றுநோய் இன்னதென்பதைக் கண்டறிந்து குணமாகுதல்களிலெல்லாம் சிறந்த குணமாகுதல் என்ன என்பதைப் பரிந்துரைக்கிறது. - ரே கம்ஃபர்ட்**


வேதப்பகுதி: கலாத்தியர்


# விளையாடுவோம் வேதாகம விளையாட்டு - 9


குறிப்பு : பதில்கள் அனைத்தும் வசன ஆதாரத்துடன் இருக்க வேண்டும். வேதாகமத்தைப் பார்த்துக் கண்டுபிடிக்கலாம்.

QUIZ!

## கொடுக்கப்பட்டுள்ள படங்களிலிருந்து கலாத்தியர் வசனங்களைக் கண்டறியவும்

1. 

2. 


3. 

4. 


5. 

6. 


7. 

8. 

9. 

10. 

CLICK HERE https://forms.gle/tq7hCoiswuXryrMd7

மேலே கொடுக்கப்பட்ட இணைப்பை கிளிக் செய்து சரியான பதிலை 05/08/2025 க்கு முன்பதாக அனுப்பவும். சரியான பதில் அனுப்பும் முதல் 10 நபர்களுடைய பெயர்கள் அடுத்த மாத இதழில் குறிப்பிடப்படும்.

## GODependence சமூக ஊடக தளங்கள்

### GODependence WhatsApp Channel

JOIN NOW!

இது தமிழில் GODependence இன் அதிகாரப்பூர்வ whatsapp சேனல்.

தினமும் வேதாகமம், வேதவாசிப்பு குறித்த மேற்கோள்கள் மற்றும் அவ்வப்போது வேதவாசிப்பு சவால்கள் குறித்த மற்றும் பிற அறிவிப்புகள் பெற விரும்பினால், நமது தமிழ் சானலை follow பண்ணுங்கள்... நன்றி.

https://whatsapp.com/channel/0029Va8tCqzC6ZvpLu3JBj3R

CLICK HERE




### ஆசிரியர் குழு

பேதுரு தேவதாசன்
அற்புதராஜ் சாமுவேல்
ஜோ. இ. ஆ. ஈஸ்டர் ராஜ்
ஏ. ஆர். பீட்டர்
டெ. டென்சிங்
டார்வின் நேசகுமார் அ
ஷோபா தானியேல்
ஜோசஃபீன் ஷைனி பால்
கேதரின் சுஜி

### GODependence வேதவாசிப்பு சவால்கள் தொடர்பு எண்கள்:

பல்வேறு மொழிகளில் நடைபெறும் வேத வாசிப்பு சவால்களுக்காக GODependence பின்வரும் தொடர்பு எண்களை பயன்படுத்துகிறது.

நீங்கள் எந்த மொழியில் வேதவாசிப்பு சவாலில் சேர விரும்புகிறீர்களோ, அதற்குரிய எண்ணில் தொடர்பு கொண்டு குழுவில் சேரலாம்.

- தமிழ் - +965 6596 2559
- ஆங்கிலம் - +91 95255 95265
- பிற மொழிகள் - +91 99628 34944

(ஹிந்தி, மலையாளம், கன்னடம், தெலுங்கு, ஒடியா, பஞ்சாபி, மராத்தி அல்லது பெங்காலி)

### GODependence YouTube Channel

GODependence தமிழ் சேனல்
1.2K சந்தாதாரர்களையும்
265 வீடியோக்களையும் எட்டியுள்ளது .

CLICK HERE https://youtube.com/@godependencetamil







### எமது தரிசனம்

ஜனங்கள் தேவனை சார்ந்து இருக்கும் வாழ்க்கையைக் கட்டமைத்துக் கொள்ள அவர்களுக்குத் தேவையான ஞானம், ஆக்கவளம் மற்றும் வலிமை அளிப்பது.

### எமது பணித்திட்டம்

வேத வசனம் மற்றும் ஜெபத்தில் தங்களை அதிகமாக ஈடுபடுத்திக் கொள்வதன் மூலமாக ஜனங்கள் தேவனைச் சார்ந்து இருப்பதில் உதவ GODependence நாடுகிறது.

தேவனுடைய வார்த்தையைக் கேட்பவர் சாப்பிட்ட பின் உணவை அசைபோடுகிற விலங்குகளைப் போல இருக்க வேண்டும். அவர் தேவனுடைய வார்த்தையை உணவாக மட்டும் எடுத்துக் கொள்ளாமல், அதை சிந்தித்து தியானிக்க வேண்டும். - அகஸ்டின்

# உங்களுக்குத் தெரியுமா?
















## கடந்த மாத இதழில் விளையாடுவோம் வேதாகம விளையாட்டு - 8 மற்றும் வேதாகம குறுக்கெழுத்துப் புதிர் - 8 இல் பங்கு பெற்று சரியான பதில்களை அனுப்பிய நபர்களின் பெயர்கள் மற்றும் சரியான பதில்கள்

### வேதாகம குறுக்கெழுத்துப் புதிர் - 8

➡️ இடமிருந்து வலம்
1. கிறிஸ்து (4:4)
5. உத்தமன் (10:18)
7. மோசே (3:13)
9. அரேத்தா (11:32)
11. இரண்டுமூன்று (13:1)
13. சாத்தான் (11:14)
14. மரணம் (7:10)
18. தந்திரங்கள் (2:11)

⬇️மேலிருந்து கீழ்
2. எழுத்து (3:6)
3. முள் (12:7)
16. ஆறுதல் (1:4)
17. நீதி (6:7)

⬆️கீழிருந்து மேல்
1. கிருபை (4:15)
3. முக்காடு (3:14)
4. இளைப்பாறுதல் (7:5)
10. கவலை (11:28)
12. மூன்று (11:25)

⬅️ வலமிருந்து இடம்
6. தீத்து (8:23)
8. ஏவாள் (11:3)
15. மிலாறு (11:25)
19. அறிவிலே (11:6)

**சரியான பதில்களை அனுப்பிய முதல் 9 நபர்கள்:**

- ஜினிஷா
- சி வி க்ரீட்லின் பிளெஸி
- கிறிஸ்டி ஜோசப்
- எஸ்.மோகன்ராஜ்
- ஆர் ஜோசபின்
- அ.ஜாய்ஸ் செல்லத்துரை
- விஜிலா.பி
- ரைச்சல் அமுதவல்லி
- மணி மாலா ச

**வேதப்பகுதி:**
**2 கொரிந்தியர்**

### விளையாடுவோம் வேதாகம விளையாட்டு - 8

**கொடுக்கப்பட்டுள்ள படங்களைக் கொண்டு 2 கொரிந்தியரில் வரும் வசனங்களை கண்டுபிடி.**

1) 2 கொரிந்தியர் 5:6
2) 2 கொரிந்தியர் 12:9
3) 2 கொரிந்தியர் 4:18
4) 2 கொரிந்தியர் 3:17
5) 2 கொரிந்தியர் 4:7
6) 2 கொரிந்தியர் 9:7
7) 2 கொரிந்தியர் 5:21
8) கொரிந்தியர் 10:17
9) 2 கொரிந்தியர் 1:20
10) 2 கொரிந்தியர் 5:17

**சரியான பதில்களை அனுப்பிய 8 நபர்களின் பெயர்கள் :**

- ஜினிஷா
- சி வி க்ரீட்லின் பிளெஸி
- அ. ஜெய்ஸ் செல்லத்துரை
- கிறிஸ்டி ஜோசப்
- ஆர் ஜோசபின்
- எஸ்.மோகன்ராஜ்
- விஜிலா.பி
- மணி மாலா ச.

பிரகாசமான தருணங்களிலும் மற்றும் பிரச்சனைகளில் இருக்கும்போதும் பரிசுத்த வேதாகமத்திற்கு நேராகச் செல்லும் பழக்கத்தை நாம் ஏற்படுத்திக் கொள்ளாவிடில், நம்மால் வேதம் தரும் ஆறுதல்களுக்கு முழுமையாக பதிலளிக்க முடியாது. ஏனெனில், நாம் இருளுக்கும் ஒளிக்கும் இடையே உள்ள சமநிலையில் குறைவு உள்ளவர்களாக இருக்கிறோம். - ஹெலன் கெல்லர்

# GODependence வேத வாசிப்பு சவால்கள்

30 ஜூன் 2025 அன்றுடன் முடிவடைந்த GODependence வேதவாசிப்பு சவால்களில் வெற்றிகரமாக வேதாகமத்தை வாசித்து முடித்தவர்கள்

















பரிசுத்த வேதாகமம் போல் வித்தியாசமானவைகளைக் கொண்ட அல்லது ஞானம் நிறைந்த புத்தகம் வேறெதுவும் இல்லை. - ஹெர்பர்ட் ஹூவர்



# மொர்தெகாய்

## ஒரு சிறந்த வழிகாட்டி

-எஸ்தர் 2:5-11, 20; 4:13-17)

மொர்தெகாய், ராஜா நேபுகாத்நேச்சரால் நாடுகடத்தப்பட்ட ஒரு யூத கைதி. எஸ்தருடைய பெற்றோர் இறந்தபோது, அவன் தன் உறவினரான எஸ்தரை தனது மகளாக எடுத்துக் கொண்டான்.

அகாஸ்வேரு ஆட்சிக் காலத்தில், எஸ்தர் ராணியானாள். மொர்தெகாய் அவளுடன் தொடர்ந்து தொடர்பில் இருந்தான். சில திருப்பங்களுக்குப் பிறகு, ஆமானால் ஏமாற்றப்பட்ட ராஜா அகாஸ்வேரு, பன்னிரண்டாம் மாதத்தின் பதின்மூன்றாம் நாளில் யூதர்களை அழிக்க ஒரு ஆணையை பிறப்பித்தார்.

பின்னர் மொர்தெகாய் எஸ்தரை ராஜாவை சந்திக்கச் சொன்னார். அது அவளுடைய உயிருக்கு ஆபத்தை விளைவிக்கும் என்பதால் எஸ்தர் முதலில் தயங்கினாள். ஆனால் மொர்தெகாயின் வற்புறுத்தலின் காரணமாக, அவள் ராஜாவைச் சந்தித்தாள். அந்தச் சந்திப்பு இறுதியில் யூதர்கள் ஒன்றுகூடி தங்களைப் பாதுகாத்துக் கொள்ளவும் அவர்களைத் தாக்கும் எந்த ஆயுதப்படையையும் கொன்று அழிக்கவும், அனுமதிக்கும் ஒரு ஆணையை ராஜா பிறப்பிக்க வழிவகுத்தது.

ஆணை யூதர்களால் நிறைவேற்றப்பட்டது. இதனால், மில்லியன் கணக்கான யூதர்களின் அழிவு முறியடிக்கப்பட்டது.

### மொர்தெகாயிடமிருந்து வழிகாட்டுதல் பாடங்கள்:

1. மொர்தெகாயைப் போலவே, நாம் மற்றவர்களையும் கர்த்தருக்குள் வழிநடத்த முடியும், அவர்கள் நம் குழந்தைகள் இல்லையென்றாலும்.

2. மொர்தெகாய் எஸ்தர் ராணியான பிறகும் அவளுக்கு வழிகாட்டினார். நமது மூலமாய் வழிநடத்தப்படுபவர்கள் வேலைக்குச் சென்றாலும் அல்லது திருமணம் செய்து கொண்டாலும், அவர்களுக்கு நமது ஞானத்தைத் தொடர்ந்து தெரிவிப்பது நல்லது.

3. எஸ்தர் மீது மொர்தெகாயின் பெரும் செல்வாக்கு இருந்ததால், அவள் ராணியான பிறகும் அவருக்குக் கீழ்ப்படிந்தாள்.

4. எஸ்தரின் தலையீட்டின் மூலம், பெர்சியாவில் உள்ள யூத புலம்பெயர்ந்தோர் அழிவிலிருந்து தப்பினர். கிறிஸ்துவில் விசுவாசிகளை நாம் கட்டியெழுப்பும்போது, அவர்கள் நம்மால் முடிந்ததை விட பெரிய காரியங்களைச் செய்வார்கள்

**– சகோ. பீட்டர் ஏ.ஆர். பாலக்காடு, கேரளா.**

---

## வேதாகம குறுக்கெழுத்துப் புதிர் - 9

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | | | | 2 |
| | 3 | | | | 4 | | | |
| 5 | | | | 6 | | | 7 | |
| | ■ | | | | 8 | | ■ | |
| | | | 9 | | ■ | | ■ | |
| 10 | | | | 11 | ■ | | | |
| 13 | | | | | | 14 | ■ | |

### வேதப்பகுதி: கலாத்தியர்

**➡ இடமிருந்து வலம்**

1. வேறொரு _____ இல்லையே (5)
3. ____ என்றும் கிரேக்கனென்றும் இல்லை (3)
4. பவுலுடன் இருந்த கிரேக்கன் (3)
5. பவுலுக்குள் பிழைத்திருக்கிறவர் (4)
6. அன்பினால் ____ செய்கிற விசுவாசமே உதவும் (3)
10. நாம் யாரைப்போல் வாக்குத்தத்தத்துப்பிள்ளைகள் (4)
13. கிறிஸ்து நமக்காக ____ ஆகி.... (3)

**⬅ வலமிருந்து இடம்**

2. மூன்று வருஷத்துக்கு பின் பேதுருவை பார்க்க பவுல் போன இடம் (5)
8. தூண்களாக எண்ணப்பட்ட மூவரில் ஒருவர் (4)
9. மாம்சத்துக்கென்று விதைப்பவன் அறுப்பது (3)
12. அரபி தேசத்திலுள்ள சீனாய்மலை (3)
14. தேவன் தம்மை _______ பண்ணவொட்டார். (5)

**⬇ மேலிருந்து கீழ்**

1. அவனவன் தன்தன் ______யை சோதித்துப் பார்க்கக்கடவன் (5)
12. மாம்சத்துக்கு விரோதமாக இச்சிப்பது (2)

**⬆ கீழிருந்து மேல்**

7. விருத்தசேதனமுள்ளவர்களுக்கு அப்போஸ்தலன் (3)
11. நல்விஷயத்தில் _____ பாராட்டுவது நல்லதுதான் (6)
12. கிறிஸ்துவினுடையவர்கள் யாருடைய சந்ததியார்? (5)
14. யூதர்களின் மாயத்தினால் இழுப்புண்டவன் (4)

குறிப்பு : பதில்கள் அனைத்தும் வசன ஆதாரத்துடன் இருக்கவேண்டும். வேதாகமத்தைப் பார்த்துக் கண்டுபிடிக்கலாம்.

CLICK HERE https://forms.gle/W2zGZds3oSdhBS6P6

மேலே கொடுக்கப்பட்ட இணைப்பை கிளிக் செய்து சரியான பதிலை 05/08/2025 க்கு முன்பதாக அனுப்பவும். சரியான பதில் அனுப்பும் முதல் 10 நபர்களுடைய பெயர்கள் அடுத்த மாத இதழில் குறிப்பிடப்படும்.

**வேதாகமத்தை வாசிக்கும் கிறிஸ்தவர்கள் வளருகிற கிறிஸ்தவர்களாக இருக்கிறார்கள். கிறிஸ்தவர்கள் வேதாகமம் வாசிப்பதை நிறுத்தும்போது, அவர்கள் வளருவதும் நின்றுவிடுகிறது. - ஜான் வெஸ்லி**

GODependence
True freedom is being dependent on God

# Bible Reading Challenges

## GODependence வேதவாசிப்புச் சவால்களில் உள்ள சிறப்புத் தன்மைகள்

1. 1 மாதம் முதல் 1 வருடம் வரையிலான வேதவாசிப்பு காலத்தை வசதிக்கேற்ப தெரிவு செய்து கொள்ளும் வாய்ப்பு. [முழு வேதாகமத்தை 1 மாதம் / 2 மாதங்கள்/ 3 மாதங்கள்/ 4 மாதங்கள்/ 6 மாதங்கள் அல்லது 1 வருடத்தில் வாசித்தல்].
2. உங்களுக்கு விருப்பமான மொழியில் வேதத்தை வாசிக்கும் வாய்ப்பு-10 மொழிகள் (ஆங்கிலம், தமிழ், இந்தி, மலையாளம், கன்னடம், தெலுங்கு, ஒடியா, பஞ்சாபி, மராத்தி மற்றும் பெங்காலி).
3. வேதவாசிப்புப் பகுதி முந்தின தினம் இரவிலேயே பகிரப்படும்.
4. வேதவாசிப்பை உற்சாகப்படுத்தும் அனுதின மேற்கோள்கள் (Quotes).
5. வேத வாசிப்பில் முன்னேற்றத்தை சுயபரிசோதனை செய்து கொள்ள உதவும் வாரந்தோறும், இரண்டு வாரங்களுக்கு ஒருமுறை, மற்றும் மாதமொரு முறை என நடைபெறும் மீள்பார்வைகள் (Reviews).
6. தவறிய பகுதிகளை வாசிக்க Catch-Up நாட்கள் மற்றும் தேவைப்பட்டால் வேதவாசிப்பு காலத் திட்டங்களை மாற்றிக் கொள்வதற்கான வாய்ப்பு.
7. அனைவர் நலன் காக்கும் வாட்ஸ்அப் குழுக்களின் விதிமுறைகள் - இது வேதவாசிப்புக்கென உள்ள தனித்துவமான குழு.
8. பாராட்டுச் சான்றிதழ்கள் மற்றும் பரிசுகள் (நிபந்தனைகளுக்கு உட்பட்டது).
9. நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ எங்கும் எந்த விதமான கட்டணமும் கேட்கப்படாது.
10. தேவனுடைய வார்த்தையுடன் (வேத தியானம், வேத மனனம் மற்றும் வேத ஆராய்ச்சி என) மேற்கொண்டு ஈடுபடுவதற்கான வாய்ப்பு.

**முறையாக மற்றும் முழுமையாக
வேதாகமத்தை வாசிக்க மிக அருமையான ஒரு வாய்ப்பு!**

https://www.godependence.com/brc



தீர்க்கதரிசியின் மூலமாய்க் கர்த்தராலே உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இதெல்லாம் நடந்தது. அவன்: இதோ, ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள்; அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவார்கள் என்று சொன்னான். இம்மானுவேல் என்பதற்கு தேவன் நம்மோடிருக்கிறார் என்று அர்த்தமாம். - மத்தேயு 1: 22, 23

**உங்கள் பெயர், ஊர், குடும்பம், கிறிஸ்தவ பின்னணி & வளர்ப்பு:**

கர்த்தருக்கு ஸ்தோத்திரம். எனது பெயர் ஹரிஹரன். நான் திருநெல்வேலி மாவட்டத்தில் வசித்து வருகிறேன். நான் ஒரு பக்தி வைராக்கியமான இந்து குடும்பத்தில் வளர்க்கப்பட்டேன். திருமணத்திற்கு பின்பு என் மனைவியானவள் ஒரு கிறிஸ்தவளாக இருந்தபடியினாலே நான் கிறிஸ்துவை அறிந்து கொண்டேன். அன்று முதல் கொண்டு கிறிஸ்துவே என் இரட்சகர், இயேசுவே என் இரட்சகர் என்று அவரை ஆராதிக்க தொடங்கினேன். நான் 2010 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டேன்.

**GODependence வேதவாசிப்பு சவால்கள் குறித்ததான அறிமுகம் உங்களுக்கு எப்படி கிடைத்தது?**

ஒருமுறை பேஸ்புக்கில் சென்று பார்த்துக் கொண்டிருக்கும் பொழுது வேத வாசிப்பு சவால் பற்றியதான ஒரு செய்தி கிட்டியது. அப்பொழுது நான் அந்த செய்தியின் உள்ளே நுழைந்தேன். எனக்கு ஒரு பதிவு செய்ய ஒரு கூகுள் பார்ம் கிடைக்கப்பெற்றேன் அதில் பதிவு செய்தவுடன் என்னை வேதவாசிப்பு சவாலில் இணைத்தார்கள். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

**நீங்கள் இதுவரையும் சராசரியாக எத்தனை முறை பரிசுத்த வேதாகமத்தை முழுவதும் வாசித்திருக்கிறீர்கள்? அவற்றுள் GODependence வேத வாசிப்பு மூலமாக எத்தனை முறை வாசித்திருக்கிறீர்கள்?**

நான் ஞானஸ்நானம் பெற்ற நாளிலிருந்து இதுவரைக்கும் 10 முறை வேதத்தை முழுமையாக வாசித்து உள்ளேன். அதில் ஆறு முறை நம்முடைய GODependence வேத வாசிப்பு சவாலின் மூலமாக வாசித்து உள்ளேன்.

முதல்முறையாக இந்த வேத வாசிப்பு சவாலில் இணைந்து நான் வேதத்தை படித்துக் கொண்டிருக்கும் பொழுது அதனுடைய அர்த்தங்கள் எனக்கு முழுமையாக அறிந்து கொள்ள முடியாத நபராய் காணப்பட்டேன். அந்த வருடம் முழுமையாக வாசித்து முடித்தேன். அடுத்த ஆண்டிற்கு தேர்வு செய்யும் பொழுது எனக்கு சில குறிப்புகள் அவர்கள் தந்தார்கள். வாட்ஸப் மூலமாக அந்த குறிப்புகளை பார்த்து வேத வாக்கியங்களில் உள்ள ஒவ்வொரு வார்த்தைக்கு அர்த்தம் புரிந்து கொண்டு அதை வாசிக்க ஆரம்பித்தேன். அதன் நிமித்தமாக பல வார்த்தைகள் எனக்கு புரிய ஆரம்பித்தது. அப்பொழுது ஆவியானவர் என்னோடு பேசுவதையும் நான் உணர்ந்து கொண்டேன். இதன் மூலமாக ஒவ்வொரு நாளும் வேதத்தை படிக்காமல் வெளியே செல்லக்கூடாது என்ற ஒரு காரியத்தை நான் சிரமேற்கொண்டு செய்ய என்னால் முடிந்தது.

**நீங்கள் பரிசுத்த வேதாகம வாசிக்கும் போது உங்களுக்கு கிடைத்த ஆசீர்வாதம் என்ன?**

வேதத்தை படிப்பதன் மூலமாக அநேக நன்மைகளும் பல ஆசீர்வாதங்களும் நான் அடைந்திருக்கிறேன். சில சமயங்களில் தேவனோடு பேசும் பொழுது பல காரியங்கள் எனக்கு வெளிப்படுத்தப்பட்டது. அது எனது சுபாவத்தின் அடிப்படையில் உள்ள காரியங்கள். கர்த்தர் எனக்கு காண்பித்து தந்தார். அதில் மாற்ற வேண்டிய காரியங்களும் இருந்தன, அதை மாற்றவும் கர்த்தரின் ஆவியானவர் எனக்கு துணை செய்தார். சில சமயங்களில் கர்த்தரோடு முழங்கால் படியிட்டு அவரது சமூகத்திலே விண்ணப்பங்களை வைக்கும் பொழுது அந்த விண்ணப்பங்களை கர்த்தர் செவி சாய்த்து எனக்கு அதை நன்மைக்கு ஏதுவாய் பல தருணங்களில் எனக்கு மாற்றி தந்திருக்கிறார். ஆதலால் கர்த்தருக்கு நான் நன்றி உடையவனாக இருக்கிறேன். இவை யாவற்றிற்கும் முதற்காரணம் இந்த GODependence வேத வாசிப்பு சவால் மாத்திரமே.

இந்த சவாலை நடத்துகிறதான GODependence குழு அனுதினமும் அதிகாலையிலே அன்றைக்குரிய வேத குறிப்புகளை தருகிறார்கள். அதன் மூலமாக அதை வாசித்து இலகுவாக அந்த வருடத்திற்கான வேத வாசிப்பு சவாலைமுடிக்க முடிகிறது. இந்த வேத வாசிப்பு பல கால அளவுகளில் தருகிறார்கள். எனக்கு மிகவும் உகந்ததான கால அளவு ஒரு வருடமாக காணப்பட்டது. ஆனபடியினாலே அதை நான் பெற்றுக் கொண்டேன்.

**இறுதியாக, பரிசுத்தவேதம், வேதவாசிப்பு அதன் அவசியம் குறித்து தமிழ் கிறிஸ்தவ உலகத்திற்கு நீங்கள் ஓரிரு வாக்கியங்களில் சொல்லவிரும்புவது என்ன?**

கர்த்தருக்குள் பிரியமான என் சகோதர சகோதரிகளுக்கு நான் சொல்வது என்னவென்றால் வேதத்தின் வெளிச்சத்திலே நாம் நடக்கும் பொழுது, நம்முடைய பாதைகளில் என்னென்ன கஷ்டங்கள் வந்தாலும் அந்த கஷ்டங்கள் யாவற்றையும் கர்த்தர் தாமே மாற்றி நமக்கு ஒரு நல்ல பாதையை வழிகாட்டுகிறார் என்பதை தருணத்திலே நான் உங்களுக்கு சொல்ல விரும்புகிறேன். நான் உனக்கு முன்னே சென்று உன் கோணலான பாதைகள் யாவற்றையும் செம்மை ஆக்குவேன் என்று சொன்ன கர்த்தர் நம் முன்னே செல்கிறபடியினாலே நாம் தயங்காமல் அவரது வார்த்தையில் பிரியமாய் இருப்போமாக. கர்த்தருடைய வார்த்தையை தியானிக்க கர்த்தர் நம் யாவருக்கும் உதவி செய்வாராக.
ஆமென்



கிறிஸ்தவர்களாக, நாம் பரிசுத்த வேதாகமப் பிரமாணங்களுக்குக் கீழ்ப்படிய வேண்டிய கடமையும் பொறுப்பும் நமக்கு இருக்கிறது. - எஸ். ட்ரூட் கேத்தி

## சாட்சி-2 - சகோதரி. தே. ஹோல்டன் ஜெனட்

**உங்கள் பெயர், ஊர், குடும்பம், கிறிஸ்தவ பின்னணி & வளர்ப்பு:**

கர்த்தருக்கு ஸ்தோத்திரம். எனது பெயர் தே.ஹோல்டன் ஜெனட் ஆசிரியையாக பணியாற்றி வருகிறேன். கிறிஸ்தவ பெற்றோர்க்கு பிறந்து வளர்க்கப்பட்டேன். எனது அம்மாவின் ஜெபம், வேதவாசிப்பு இவற்றைப் பார்த்து சிறுவயதிலிருந்து வேதத்தை வாசிக்கும் வாஞ்சையையும் முடிக்க முடியும் விருப்பத்தையும் தேவன் அடிமைக்கு தந்தார்.

**நீங்கள் இதுவரையும் சராசரியாக எத்தனை முறை பரிசுத்த வேதாகமத்தை முழுவதும் வாசித்திருக்கிறீர்கள்? அவற்றுள் GODependence வேத வாசிப்பு மூலமாக எத்தனை முறை வாசித்திருக்கிறீர்கள்?**

வேதத்தை முழுமையாக 37 முறை படித்து முடிப்பதற்கு தேவன் அடிமைக்கு கிருபை பாராட்டினார். அதிலும் GODependence பைபிள் வேத வாசிப்பு மூலமாக 17 முறை வாசித்து முடிக்க கிருபை பாராட்டினார். கர்த்தருடைய நாமத்திற்கு மகிமை உண்டாவதாக.

**நீங்கள் பரிசுத்த வேதாகமம் வாசிக்கும் போது உங்களுக்கு கிடைத்த ஆசீர்வாதம் என்ன?**

வேத வாசிப்பு மூலமாக நான் பெற்ற ஆசீர்வாதங்கள் ஏராளம். **1 தடவை எப்படியாவது முழங்காலில் நின்று வாசிக்க வேண்டும்** என்ற பொருத்தனையோடு கடந்த 2024 ஜூன் முதல் நவம்பர் முடிய 6 மாத வேத வாசிப்பில் இணைந்து வாசிக்க ஆரம்பித்தேன்.

**நீங்கள் பரிசுத்த வேதாகமம் வாசிக்கும்போது ஏற்பட்ட தடங்கல்கள் என்ன? அவற்றை எவ்வாறு மேற்கொண்டீர்கள்?**

சில நாட்களுக்குள்ளே முழங்காலில் நின்று வாசிக்க முடியாத நிலையில் காணப்பட்டேன். பிலி 4: 13ன் படி என்னைப் பெலப்படுத்துகிற கிறித்துவினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்குப் பெலனுண்டு என்கின்ற வசனத்தை ஒவ்வொரு நாளும் சொல்லி ஜெபம் பண்ணி வாசிக்க ஆரம்பித்தேன். கர்த்தர் என்னைப் பெலப்படுத்தினார். 53 வது வயதில் முழங்காலில் நின்று வாசிக்க கிருபை பாராட்டிய தேவனுக்கு ஸ்தோத்திரம்.

எனது கணவர் 2017 முதல் வருடத்திற்கு ஒருமுறை வேதத்தை படித்து வந்தார்கள். 2020-லிருந்து GODependence-ல் இணைந்து வாசித்தால் தொடர்ந்து வருடத்திற்கு 3 அல்லது 2 முறை வாசித்து வருகிறார்கள். இதுவரை 16 முறை வாசித்து முடித்துள்ளார்கள். அதுபோல் எங்கள் மூத்த மகன் 9 வயது முதல் வேதாகமத்தை வாசிக்க ஆரம்பித்து GODependence ல் இணைந்து 15 முறை வாசித்து முடிக்கவும், எங்கள் இளைய மகன் 2021-க்கு முன் 2 முறையும் 2021 முதல் GODependence மூலமாக தொடர்ந்து 4 முறை வேதத்தை வாசித்து முடிக்கவும் எங்கள் குடும்பத்திற்கு கிருபை பாராட்டி ன தேவனுக்கு ஸ்தோத்திரம் செலுத்துகிறேன். **நாங்கள் குடும்பமாய் தொடர்ந்து, விடாமல் வாசிக்க GODependence-ன் பணி பேருதவியாக இருக்கின்றது.** GODependence ஊழியர்களைக் கர்த்தர் ஆசீர்வதிப்பாராக.

**இறுதியாக, பரிசுத்தவேதம், வேதவாசிப்பு அதன் அவசியம் குறித்து தமிழ் கிறிஸ்தவ உலகத்திற்கு நீங்கள் ஒரிரு வாக்கியங்களில் சொல்லவிரும்புவது என்ன?**

இதுவரையும் வேதாகமத்தை ஒரு தடவை கூட வாசிக்காதவர்கள் இந்த குழுவில் இணைந்து வாசியுங்கள். தேவனுடைய வார்த்தை உங்களோடு பேசும், தேற்றும், பெலப்படுத்தும், எச்சரிக்கும், உருவாக்கும். இறுதியாக நித்தியஜீவனை பெற்றுக் கொள்ளுகிற ஒரு பரலோக வாழ்க்கையை உங்களுக்கு அளிக்கும். கர்த்தர்தாமே இந்த சாட்சியை ஆசீர்வதிப்பாராக. ஆமென். அல்லேலூயா.

## சாட்சி-3 - சகோதரி. எலிசபெத்

கர்த்தருடைய நாமத்துக்கு மகிமை உண்டாவதாக.என் பெயர் திருமதி.எலிசபெத் சென்னையில் தண்டையார் பேட்டையில் வசித்து வருகிறேன். கிறிஸ்தவ பின்னணியில் வளர்க்கப்பட்டவள். எனக்கு திருமணமாகி மூன்று பிள்ளைகளும், 5 பேரப்பிள்ளைகளும் உள்ளனர்.

நான் GODependence பைபிள் வாசிப்புத் திட்டத்தில் சேரும்முன் பலமுறை வாசித்திருக்கிறேன். ஆண்டிற்கு இரண்டு அல்லது மூன்று முறை வாசிப்பேன். சில சமயம் ஒரு முறை கூட வாசிக்க முடியாது. ஆகவே நான் இந்த திட்டத்தில் சேர்ந்தேன். 2024ஆம் ஆண்டில் நான்கு முறை வாசித்து விட்டேன். இப்போது இரண்டு முறை வாசித்து விட்டேன்.

**வேதத்தை வாசித்து முடிக்க வேண்டும் என்ற ஆர்வம் இருக்கும் போது இரவுநேரத்தில் முடிக்காமல் தூக்கம் வராது.** மூன்றாவது முறையாக 2மாதத்திட்டத்தில் சேர்ந்திருக்கிறேன். இதனால் வேதத்தை ஆழ்ந்து படிக்க முடிகிறது. ஞாயிற்றுக்கிழமையில் அடுத்த நாளுக்கான பகுதியையும் முடித்து விடுவேன். இதனால் schoolலில் நல்ல results. Teacher's மத்தியில் பேசுவதற்கு ஞானம், பிறர் மத்தியில் ஆண்டவரைப்பற்றி சொல்வதற்கு தைரியம் கிடைத்தது.

**வேதத்தை நாம் ஒவ்வொருவரும் புரிந்து படிக்கும்போது நாம் நடக்க வேண்டிய வழிகளைக் காட்டும்**. நம்மை பரிசுத்தமான வழியில் கொண்டு செல்லும். ஆகவே அனைவரும் இந்த திட்டத்தில் சேர்ந்து ஆண்டவரின் ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ளலாம். ஆண்டவர் உங்கள் அனைவரையும் ஆசிர்வதிப்பாராக. ஆமென்.

**மேலும் சாட்சிகளுக்கு கீழ்க்கண்ட YOUTUBE இணைப்புகளை கிளிக் செய்து பார்க்கவும்**

உங்கள் வாழ்க்கையே மாற்றும் ஒரு புத்தகம் என்றால் அது வேதாகமம் CLICK HERE SIS. AMUTHA

வேதாகமம் வாசிக்க நேரத்தை அதிகரித்தபோது, Social Media குறைந்து விட்டது CLICK HERE SIS. ANITHA RUTH

**உம்முடைய வார்த்தைகள் என் நாவுக்கு எவ்வளவு இனிமையானவைகள்; என் வாய்க்கு அவைகள் தேனிலும் மதுரமாயிருக்கும். - சங்கீதம் 119:103**

# கலாத்தியர்

**எழுதப்பட்ட காலம் :** கி.பி. 49- கி.பி. 50

**நிகழ்வுகள் நடைபெற்ற காலம் :** கி.பி. 49

**நூலின் ஆசிரியர் :** அப்போஸ்தலனாகிய பவுல்

**புத்தக வகை :** கடிதங்கள்

## நூல் அறிமுகம்

- ரோமருக்கு எழுதிய கடிதம் போல் நம்பிக்கையினால் ஏற்புடைமை ஆதல் பற்றிச் சுருக்கமாகப் பேசும் இன்னொரு கடிதம் கலாத்தியர் ஆகும். ரோமர் கடிதத்தை இக்கடிதம் விளக்கவுரையாக இருக்கிறது. குறிப்பாக ரோம 1-8 அதிகாரங்கள் கலா 2:15-21 பகுதியின் விரிவுரையாக அமைகின்றன.

## சூழலும் நோக்கமும்

- கலாத்திய சபையில் யூதமயமாக்கும் கிறிஸ்தவர்கள் சிலர் புகுந்து பவுல் எடுத்துரைத்த போதனைக்கு எதிராகப் பேசினர். அவர்கள் நியாயப்பிரமானத்தின் விருத்தசேதனம் போன்றவற்றைக் கடைபிடிக்க வேண்டும் என்றனர். வேற்றினத்துக் கிறிஸ்தவர்களிடம் நல்ல பெயர் வாங்க வேண்டும் என்பதற்காக சில சட்ட எதிர்பார்ப்புகளைப் பவுல் நீக்கிவிட்டதாகக் குற்றம் சாட்டினர். இந்நிலையில் யூதமயமாக்கும் கிறிஸ்தவர்களின் போதனையை முறியடிக்கக் கடுமையான முறையில் பவுல் இக்கடிதத்தை எழுதுகிறார்.இதனை கி.பி. 52-53 ஆண்டுகளில் பவுல் எழுதினர். கலாத்தியாவில் உள்ள திருச்சபைகள் யூத மற்றும் புறஜாதியாக மதம் மாறியவர்களைக் கொண்டிருந்தன. இந்த திருச்சபைகளுக்கு எழுதியதில் பவுலின் நோக்கம், மோசேயின் நியாயப்பிரமாணத்தின் செயல்களைத் தவிர்த்து, விசுவாசத்தினால் மட்டுமே நீதிமான்களாக்கப்படுவதை உறுதிப்படுத்துவதாகும். மனித செயல்களால் அல்லாமல், விசுவாசத்தால் நீதிமான்களாக்கப்படுவது என்ற அத்தியாவசிய சத்தியம் யூதவாதிகளால் மறுக்கப்பட்டது, ஏனெனில், கிறிஸ்தவர்கள் மோசேயின் சட்டத்தைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று அந்த யூதவாதிகள் வலியுறுத்தினார். குறிப்பாக, இரட்சிக்கப்பட விரும்பும் புறஜாதிகளுக்கு விருத்தசேதனம் செய்வதை யூதவாதிகள் வலியுறுத்தினார்கள். இதை அறிந்த பவுல், கிறிஸ்துவில் நமது சுதந்திரத்தை வலியுறுத்தவும், யூதவாதிகள் ஊக்குவிக்கும் நற்செய்தியின் வக்கிரத்தை எதிர்க்கவும் இந்த கடிதத்தை எழுதினார்.

## முக்கிய வசனங்கள்

கலா 2:16, கலா 2:20, கலா 3:11, கலா 4: 5-6, கலா 5:22-23, கலா 6:7

## புத்தகத்தின் சுருக்கம்

- நாம் விசுவாசத்தின் மூலம் கிருபையால் நீதிமான்களாக்கப்படுகிறோம் என்பதன் அர்த்தம், நமக்கு கிறித்துவில் நமக்கு ஆவிக்குரிய சுதந்திரம் உள்ளது என்பதாகும். நாம் பழைய ஏற்பாட்டு நியாயப்பிரமாணத்தின் கட்டளைகளுக்கு அடிமையாக இல்லை என்பதையும், தேவகிருபையை இழிவுபடுத்தும் மற்றும் நற்செய்தியை மாற்ற முயற்சிக்கும் எவரையும் பவுல் கடுமையாக கண்டிக்கிறார் (கலா 1:8-10). அவர் தனது அப்போஸ்தல நற்சான்றிதழ்களை (கலா 1:11-2:14) கொடுக்கிறார், மேலும் நீதியானது நியாயப்பிரமாணத்தின் செயல்களால் அல்ல (கலா 2:21) கிறிஸ்துவின் மூலமாக வருகிறது என்பதை வலியுறுத்துகிறார். கலாத்தியர்கள் தங்களுடைய சுதந்திரத்தில் உறுதியாக நிற்க வேண்டும் எனவும், மீண்டும் அடிமைத்தனத்தின் நுகத்தடியில் (அதாவது, மோசேயின் சட்டம்) சிக்கிக்கொள்ளக்கூடாது (கலா 5:1) என்றும், ஒருவரின் பாவ இயல்பை திருப்திப்படுத்த கிறிஸ்தவ சுதந்திரம் அல்ல மாறாக, அது ஒருவரையொருவர் நேசிப்பதற்கான வாய்ப்பாகும் (கலாத்தியர் 5:13; 6:7-10) என்பதையும் பவுல் கூறுகிறார். கிறிஸ்தவ வாழ்க்கை மாம்சத்தில் அல்ல, ஆவியின் வல்லமையில் வாழ்வது (கலா 5:16-18) ஏனெனில் நம் மாம்சம் கிறிஸ்துவுடன் சிலுவையில் அறையப்பட்டது (கலாத்தியர் 2:20) இதன் விளைவாக, ஆவியானவர் விசுவாசியின் வாழ்க்கையில் அவருடைய கனிகளைக் கொடுப்பார் (கலா 5:22-23) என்றும் திட்டமாக பவுல் கூறினார். பிரச்சினை ஒரு நபர் விருத்தசேதனம் செய்யப்பட்டவரா என்பது அல்ல, மாறாக அவர் ஒரு "புதிய படைப்பா" (கலா 6:15) என்பதே. இரட்சிப்பு என்பது ஆவியின் செயல், நாம் மீண்டும் பிறக்க வேண்டும் (யோவா 3:3). விருத்தசேதனம் போன்ற வெளிப்புற மத சடங்கினால் ஆவியின் மண்டலத்தில் எந்த மதிப்பும் இல்லை. கலா 1-2 அதிகாரங்களில் விசுவாசத்தினால் மட்டுமே நாம தேவனுக்கு ஏற்புடையவர்களாகிறோம் என்கிறார் பவுல். கிறிஸ்தவர் தூய்மையாக்கப்படுவது நியாயப்பிரமாணம் சார்பான செயல்களால் அல்ல, மாறாக விசுவாசத்தினால் விளையும் கீழ்ப்படிதலால் என்கிறார். கிறிஸ்துவைச்சார்ந்தோர் உரிமை வாழ்வுக்கு அழைக்கப்பட்டவர்கள் என்பதை அழுத்தந்திருத்தமாகக் கூறுகிறார் (அதி 3-4). கிறிஸ்தவ வாழ்வு கிறிஸ்துவின் மீது கொண்டவிசுவாசத்தினால் விளையும் அன்பின் அடிப்படையில் உள்ளது என்கிறார் (அதி 5-6).

## புத்தகத்தில் இயேசுகிறிஸ்து

- கலாத்தியர்களுக்கு பவுல் எழுதிய நிருபம் முழுவதும், இரட்சிப்பு-தேவனின் பரிசு-காப்பாற்ற முடியாத மோசேயின் சட்டத்திற்கு எதிராக உள்ளது. யூதவாதிகள் நியாயப்படுத்தலின் ஆதாரமாக மோசேயின் சட்டத்திற்குத் திரும்ப வேண்டும் என்று வலியுறுத்தினர், பேதுருவும் அவர்களின் வஞ்சக வலையில் தற்காலிகமாக இழுக்கப்பட்டார் (கலா 2:11-13). நீதிமான்களாக்கயியலாத நியாயப்பரமானம் (2:16), நியாயப்பிரமானத்திற்கு செத்துவிட்ட விசுவாசி (2:19), விசுவாசத்தினால் ஆபிரகாமின் நீதிமானாக்கப்படுதல் (3:6), நியாயப்பிரமாணம் தேவனின் இரட்சிப்பைக் கொண்டுவராமல், அவருடைய கோபத்தைக் கொண்டுவருவைத்து (3:10), நியாயப்பிரமாணத்தின் நிறைவேற்றமாக அன்பு (5:14), விசுவாசிகள் ஆகாரின் பிள்ளைகள் அல்ல சாராளின் ஆவிக்குரிய பிள்ளைகள் (4:21-31) போன்றவற்றை பவுல் எடுத்துரைக்கிறார். கலாத்தியர் புத்தகம் நீதியான வாழ்க்கையை உருவாக்கும் கிருபையின் நற்செய்தியை உயர்த்திக் காட்டுகிறது (கலா 3:13-14).

## நடைமுறைப் பயன்பாடு

- கலாத்தியர் புத்தகத்தின் முக்கிய கருப்பொருள்களில் ஒன்று 3:11 இல் காணப்படுகிறது: "நீதிமான்கள் விசுவாசத்தினால் வாழ்வார்கள்." இந்த சத்தியத்தில் நாம் உறுதியாக நிற்க வேண்டும். நியாயப்பிரமாணத்தைக் கடைப்பிடிப்பதன் மூலம் நாம் இரட்சிக்கப்பட முடியுமானால், இயேசு இறக்க வேண்டிய அவசியமில்லை (கலா 2:21). நம்மைக் காப்பாற்றிக் கொள்ள முயல்வது தேவ கிருபையை வீணாக்குகிறது. நாம் விசுவாசத்தினால் இரட்சிக்கப்படுவது மட்டுமல்ல (யோவா3:16, எபே 2:8-9) கிறிஸ்துவே விசுவாசிகளுக்குள் வாழ்கிறார் (கலா 2:20). ) விசுவாசம் என்பது நாம் சுயமாக கற்பனை செய்வதல்ல, கிரியைகளும் அல்ல, அது தேவனின் பரிசு (எபே 2:8-9). ஆனால் வேதத்தை வாசிப்பது, ஜெபிப்பது, கீழ்ப்படிவது ஆகியன மூலம் பிறர் பார்க்கும் வகையில் நம்முடைய விசுவாசத்தை வெளிப்படுத்துவது நமது பொறுப்பும் மகிழ்ச்சியும் ஆகும்.

## நூலின் அமைப்பு

1) முன் னுரை (வாழ்த்தும் நற்செய்தியும்) 1: 1 - 10
2) நிகழ்ச்சிப்பகுதி: பவுல் அப்போஸ்தலராக அழைப்பு பெறல், எருசலேம் சங்கம்,பவுல் அறிவிக்கும் சுவிசேஷம் 1:11 - 2:2
3) கொள்கைப்பகுதி: விசுவாசத்தால் தேவனுக்கு நீதிமான்களாக்கப்படுதல் 3:1 - 4:31
4) அறிவுரைப்பகுதி: கிறிஸ்தவரின் உரிமை வாழ்வு, விசுவாசம் ஆகியவற்றை வாழ்ந்து காட்டுதல் 5:1 - 6:10
5) முடிவுரை 6:11 - 18

GODDependence
தொகுப்பு: சகோ. A. டார்வின் நேசகுமார்

தேவனுடைய மனதில் என்ன இருக்கிறது என்பது வேதத்தில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது; எனினும், பரிசுத்த ஆவி எனும் கண்ணாடி இல்லாமல் நாம் அதில் எதையும் பார்க்க முடியாது. - தாமஸ் மன்டன்

1

## GODependence குழுவின் 3வது குடும்பக் கூடுகை - ஆகஸ்ட் 2025

நமது GODependence குழுவின் 3வது குடும்பக் கூடுகை 01 & 02 ஆகஸ்ட் 2025 ஆகிய நாட்களில் பெங்களூருவில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

குழுவின் உறுப்பினர்கள் தங்கள் குடும்பத்தினருடன் ஐக்கியம், ஆவிக்குரிய புத்தாக்கம் மற்றும் திட்டமிடலுக்காக பல்வேறு மாநிலங்களிலிருந்து ஒன்றுகூடுகிறோம். உங்கள் ஜெபங்களில் எங்களை நினைவுகூருங்கள்.



திருநெல்வேலி மாவட்டம் வள்ளியூரில் 08 ஜூலை 2023 அன்று நடைபெற்ற GODependence குழுவின் முதல் குடும்பக் கூடுகை.



சென்னையில் 27 ஜூலை 2024 அன்று நடைபெற்ற GODependence குழுவின் 2ஆம் குடும்பக் கூடுகை.

2




## GODependence கருத்தரங்கு - ஜூலை 2025

ஜூலை 2025 மாதத்திற்கான GODependence கருத்தரங்கம் ஏற்பாடு செய்யப்பட முடியவில்லை.

இது வரும் ஆகஸ்ட் 2025 மாதத்தில் ஏற்பாடு செய்யப்படும்.

3

## வேத தியான குழுக்கள் (BMG) - September 2025 முதல்



தவிர்க்க முடியாத சூழ்நிலைகளால், நாம் மீண்டும் தொடங்க திட்டமிட்டிருந்த வேத தியானக் குழுக்கள் (BMG) செப்டம்பர் 2025 முதல் தான் தொடங்கும்.

இதற்கான பயிற்சி குறித்த அறிவிப்புகள் மற்றும் விவரங்கள் ஆகஸ்ட் 2025 இல் வேதவாசிப்பு சவால் குழுக்களுக்கு அனுப்பப்படும்.

FOLLOW US!

GODependence வேதவாசிப்பு சவால்கள்

+965 6596 2559

GODependence - தமிழ் (YouTube)

GODependence - தமிழ் (Facebook)

GODependence - தமிழ் (Instagram)

GODependence (Web)

GODependence (X)

தொடர்பு முகவரி:
**GODependence**
105 Y/1A, நல்ல சமாரியன் நகர்,
வள்ளியூர் - 627117,
தமிழ்நாடு, இந்தியா.

**முழு வேதாகமத்தையும் அதில் உள்ள அனைத்தையும் நம்பும் பழங்கால பாரம்பரிய ஊழியர்களில் நானும் ஒருவன். - ஜே.சி. ரைல்**